அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

மலர் 1 | விரோதி௵—தை௴ 1950௵ ஜனவரி௴—பிப்ரவரி௴ | இதழ் 10



கைலாசபதி முருகனைத் தனது திருக்கரத்தாலெடுத்து தொடைமீதிருத்திப் பிரணவத்தின் பொருளைக்கேழ்க்க, முருகன் பரமனின் காதில் இரகசியமாய்ச் சொல்லுகிறார். (கந்தபுராணச் சித்திரவிளக்கம்—8)

ஆயுர்வேதவித்வான் B.V. பண்டிட்ஸ்
'சத்வைத்யசாலை' நஞ்சன்கூடு

யாவருக்கும்
I.D.L.21 ஸ்வாஸ்கோ இருமல், காசம் சுவாச வியாதிக்கு
I.D.L.72 ஹார்டோன் ஹிருதய வலி, மயக்கம், துடிப்புக்கு
I.D.L.75 டீப்சன் ஜீரண உபாதைக்கு
I.D.L.99 ஜ்வரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்

மாதர்களுக்கு
I.D.L.71 ப்ரிமெலெக்ஸ் ரத்த, பல விருத்திக்கு
I.D.L.97 ஹிஸ்மெரு பலஹீனம் மயக்கத்திற்கு
I.D.L.81 ப்ரதமென்ஸ் ருதுக உபாதைக்கு
I.D.L.91 யூடிரூல் கெர்ப்பாசய டானிக்
I.D.L.96 டோனடெல் ஜீர்ண விருத்திக்கு

குழந்தைகளுக்கு
I.D.L.12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
I.D.L.18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
I.D.L.15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
I.D.L.31 சிசுராக் ஜீர்ண டானிக்

அவசிய தின உதவிகள்
"நஞ்சன்கூடு பல்பொடி" I.D.L.61 (ரெஜிஸ்டர்ட்)
பயோரியா, மற்ற பல் உபாதைகளுக்கு
I.D.L.78 கூலெக்ஸ் உஷ்ண, சமன தைலம்
I.D.L.55 ஜிஞ்சிப் அஜீரண, பித்த சமனி
'யூனிகான்' சுத்த தேன்

தபால் மூலமும் நீங்கள் விலாசமுள்ள கவருடன் வியாதி விபரம் எழுதி, எங்கள் வைத்தியரால் தபால்மூலம் சிகிச்சை பெறவும்

ஸோல் ஏஜெண்டுகள்
யுனைடெட் கன்ஸர்ன்
54, பந்தர் தெரு :: மதராஸ்.1

326

என்னையறியாமல்
எனக்குள்ளே நீயிருக்க
உன்னையறியாமல்
உடலழிந்தேன் பூரணமே.

(பட்டினத்தார்)

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
பேடீஸ்
நெ. 1506

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை.
ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி
" எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே "
மலர் 1 { விரோதிஹு தைமீ ஜனவரி—பிப்ரவரி 1950 } இதழ் 10

மணியும் ஒளியும்.

(ஸ்ரீ திருப்புகழ் மணி)

" பொன்னே! மணியே! பொருளே! அருளே!
மின்னே! மயிலேறிய வானவனே "——அநுபூதி.

மணிக்கு உயிர் ஒளி. ஒளிக்கு உடல் மணி. தூய்மை கொண்டது மணி. தோய்ந்து நிற்பது ஒளி. அழகின் அரங்கம் மணி, அழகின் நடனம் ஒளி. கண்ணில் உறைவது மணி. கருத்தில் ஒளிர்வது ஒளி. பேதம் செறிந்தது மணி. அபேதம் திகழ்வது ஒளி. பேதித்த ஜடத்தில் மணியாகவும், பேதத்தில் உறையும் அபேத அறிவாய் விளங்குவது ஒளியாகவும், எங்கும் நிறைந்து நிற்பதுவும் முருகன் என்றார் அருணகிரி. உலகம் பரந்தபண்பே என் குருநாதன் என்று கூறி வாவென்றழைக்கின்றார். உலகின்கண் ரத்னங்

ஞானச் சித்திச் சித்திர நித்தத் தமிழால்
உன் நாமத்தைக் கற்றுப்புகழ் கைக்குப் புரிவாயே

களைச் சிலர் பெற்றிருக்கின்றார்கள். ஐஸ்வரியமாக அதை வைத்துக் காப்பாற்றுகிறார்கள். அணிகலமாய் அணிந்து மகிழ்கின்றார்கள். இழந்து துன்புறுகின்றார்கள். ஆசைக்கு ஏதுவாய் நிற்கின்றன. அழிவுக்கும் காரணமாய் இருக்கின்றன. அருணகிரியார் போற்றும் மணியோ, விலையற்றது. பொருள்கொடுத்து வாங்க இயலாதது. லஞ்சம் கொடுத்து அடையவொண்ணாதது. யாவர்க்கும் எட்டக்கூடியது. ஒவ்வொரு ஜீவன் மார்பினும் துலங்குவது. பிறர் காணாமல் மறைவில் நிற்பது. அழியாத அணிகலம், பிரியாத பேரொளி. அகக்கண்ணுக்கு எளிய காட்சி. புறக்கண்ணுக்கு அரிய காட்சி. இந்த மணியே சுப்ரமான மணி. சுப்ரமணியென்றார். பாகவதத்தில் ஸ்ருதிகீதையில் உபதேசிப்பார். மார்பில் அணிந்த மணியை மறந்து ஊரெல்லாம் தேடுவார்கள் வீணர்கள். இப்படி உரைத்தது பெரும்உண்மை. முருகன் ப்ரம்மமாதலால் அவன் இருக்குமிடம் இதயம். வேதநாயகம்பிள்ளை பெண்களுக்கு எளிய தமிழில் உபதேசிப்பதும் இதுவே.

"ஈசனிருப்பிடம் இதயத்திலே; இதை இன்னபடியென்றறியாமல்—தேசமெலாம் திரிந்தலைகின்றார் திண்மையில்லாதவர் தீங்குயிலே"

"தேடித் தேடொணா தேவனை யென்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்" என்பதும் அப்பர் வாக்கன்றோ"

"உள்குவார் உள்ளத்து என்றும் உளன் கண்டாய்" என்று ஆழ்வார்கள் உபதேசிக்கவில்லையா? கோக்களை அதாவது பசுக்களை—பசுக்களாகிய உயிர்களை காப்பவன்,

---

என்னை விரும்பி நி யொருக்கால் நின்
எண்ணி விரும்பவும் அருள்வாயே

உயிருக்கு உயிராய் நிலைத்த கடவுளே தான்—ஆனந்தத் தாண்டவத்திலேயே நிற்கும் பசுபதியை, கோபனை, நந்த கோபனென்றும் கூறலாகாதோ. நந்தகோபன் குமரன் யார்? ஆண்டாள் சொல்லுவாள்—கூர்வேல் கொடுந் தொழிலன்'' இவன்தான் நாராயணனென்றால் கந்தனும் கண்ணனும் ஒரேதத்துவம் என்று தெளிகிறது. ஆகவே வேற்றுமையில் சிரேஷ்டமாயும் அபேதத்தில் உலகம் நிறைந்த பேரொளியாகவும் நின்ற உண்மை விளங்குகின் றது. பேதத்திலும் கூட எங்கும் தான் நிறைந்திருக்கின் றார். அவர் விளையாட்டு ஸ்ரேஷ்டப்பொருள்களில் வியக்த மாக காணலாம் என்பதல்லால் வேறில்லை.

அப்பர் பாடுகின்றார்.

"பொன்னானை மணியானை போகமானைப் புகழ்தக்க பொருளே''

முருகனை உபயகுலதீபனென்றும், ஜகத்திற்கு ஜோதிப் பெருமாளே யென்றும், ஜோதிநடமிடும் பெருமாளென் றும், கிரிராஜ தீபமங்கள ஜோதி யென்றும், பேரொளி யாகவே கொண்டாடுகின்றார் திருப்புகழிலே. திருமூலர் மாணிக்கத்துள்ளே மரகத ஜோதியாய் தோன்றுவார் என்றார். விஸ்வம் நிறைந்த முருகக்கடவுளை மணியிலும் மணியில் விளங்கும் ஒளியிலும் காணலாம். முருகனை தம்முள்ளத்து கொண்ட அனுபூதிமான்கள் உலகத்தில் ஒளிநிறைந்த மணிகளாய் விளங்குவார் போலும்.

அடியார் கூட்டத்தின் ஆவிர்ப்பாவம்

என். எஸ். இராமச்சந்திர ஐயர். ஆனைமலை ரோட்.

ஒருவர் மனதில் ஆண்டவன் திருப்புகழை கேட்கவும், அவன் வடிவினைத் தியானிக்கவும், நாமங்களைக் கருத்துடன் ஓதவும் ஆர்வம் எழுவது, அவர்தம் ஜன்மாந்தர வாசனையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தவமும் தவமுடையார்க்கே என்ற ஆன்றோர் வாக்கும் இதனை உறுதிப்படுத்துகின்றது. முற்பிறப்பில் ஆற்றிய வினைப்பயன்கள் யாவும் பீஜ வடிவத்தில் ஒவ்வொருவருடைய சூக்கும சரீரத்துள்ளும் புதையுண்டு கிடக்கின்றன. அவைகள் தகுந்த பருவம் வாய்க்கும்போது வெளிக்கிளம்பி ஜீவர்களின் மனப்பான்மையையும் வாழ்க்கையின் குறிக்கோளையும் திட்டப்படுத்துகின்றன.

இயற்கையில் இனம் இனத்துடன் சேருவதை நாம் கண்ணுறுகின்றோம். ஒரே மனப்பான்மை வாய்ந்தவர்கள் ஒன்று சேருகின்றார்கள். பல்வகைத் தாவர உணவு நிறைந்து கிடக்கும் தரையினின்று எவ்வாறு தாவர ஜாலங்கள் அவைகட்கேற்ற உணவினை மட்டும் தேடிப் பெறுகின்றனவோ அவ்வாறே ஜீவர்களும் தத்தம் மானஸிக ஸம்ஸ்காரங்களுக்கேற்ப நட்பாளர்களையும், உறவினர்களையும் தேடி அடைகின்றனர். இதனாற்றான் உலகுள் பற்பல இலக்ஷியங்களைக் கொண்ட கூட்டங்களும் சங்கங்களும் தோன்றியுள்ளன.

இலக்ஷியங்கள் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமாக இருக்கின்றன. இதனை நாம் இவ்வுலகில் அநுதினமும் பார்த்து வருகின்றோம். சிலருக்கு ஜீவித யாத்திரையின்

மாபுக்குச்சித ப்ரபுவாக

வாமெத் தத்தா வருவாயே

இலக்ஷியம் பணம் தேடுவதேயாகும். அநேகர் அரசியல் ஸ்தானமானாதிகளைப் பெறுவதில் கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர். விஞ்ஞான ஆராய்ச்சியில் சிலர் தம் வாணாளைக் கழிக்கின்றனர். பலர் சமூகத் தொண்டு புரிவதில் ஈடுபடுகின்றனர். இன்னும் சிலர் ஈசனருளை நாடி அடைவதில் முயற்சிக்கின்றனர். இங்ஙனம் இவ்வுலகம் பலதரப்பட்ட இயல்புகளையுடைய மனிதரை உடைத்தாயிருக்கிறது.

ஆனால் இவ்வுலகில் அமைதி நிலவ வேண்டுமாயின், இன்பவாழ்வு வாழவேண்டுமாயின், விலங்கினச்சுபாவங்கள் விலகவேண்டுமாயின், புதுயுகம் பிறக்க வேண்டுமாயின், தம்முயிர் போல் பிறவுயிர்களைக் கருதி உலகநலத்திற்காக உழைக்கும் உத்தமசீலர்கள் எங்கணும் தோன்ற வேண்டும். அவர்களின் தொகை தினே தினே பெருகிவர வேண்டும்.

தன்னலம் தேடுபவர் உலகின்கண் மலிந்திருப்பதனாலல்லவா அடிக்கடி கொலைகளும், களவுகளும், சண்டை சச்சரவுகளும், மாற்சரியங்களும், கொடிய யுத்தங்களும் நிகழ்கின்றன. கடந்த சில ஆண்டுகளாக உலகம் அநுபவித்து வந்த இன்னல்கள் எண்ணிலடங்கா. அந்தோ! அவை இன்னும் தீர்ந்தபாடில்லை. தன்னலம் இன்னும் இத்தரணியில் தலைவிரித்தாடுகின்றது. ஏழை எளியவர்கள் துன்பக்கடலினில் மூழ்கித் தத்தளிக்கின்றனர். என்றோ ஈடேறுதல்!

இத்தகைய தீங்குகள் எல்லாம் மாய வேண்டுமானால் எல்லாம் வல்ல இறைவன் அருட்கண் விழித்தாற்றான் முடியும். ஈசன் அருட்கண் பாலிப்பதற்காக தெய்வீக இயல்பு

சுட்டுச் சுடாத நிலவாலும்
தூக்கத்தில் ஆழ்வது இயல் போதான்

வாய்ந்த உண்மை அடியார்கள் நாடெங்கும் தோன்றி பலவிடங்களில் கூட்டங்கள் நடத்தி உலக க்ஷேமத்திற்காகப் பிரார்த்தனைகள் நடத்திவரவேண்டும். சகோதரத்துவம், தன்மயத்துவம் முதலிய மேலாம் கொள்கைகளைப் பரப்பி வர வேண்டும். எவ்வுயிரும் ஈசன் கோயில் என்ற உணர்ச்சியை ஊட்டவேண்டும். நிஷ்காமிய கருமத்தின் மேன்மையை அறிவுறுத்தவேண்டும்.

ஆனால் தற்காலம் நம்நாட்டில் அநேக அன்பர்கள் உலகக்ஷேமத்திற்காக பலவிடங்களிலும் தீவிரமான பூஜாபிஷேகாதிகள் சிரத்தையுடன் புரிந்து வருகின்றனர். கல்விமான்கள், "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்" என்னும் பொய்யாமொழியைச் செயல் முறையிற் கொணர முன்வந்துள்ளனர். அநேகர் அகண்ட நாம ஸங்கீர்த்தன பஜனைகள் ஆரம்பித்திருக்கின்றனர். மாதமொருமுறை குறிப்பிட்ட ஒரு ஞாயிறன்று அகண்ட மூல மந்த்ர ஜபயக்ஞம் பலவிடங்களில் நடைபெறுகின்றது. இன்னும் சில மடாதிபதிகள் உலகத்தின் தற்கால சூழ்நிலையை முன்னிட்டு அந்தர்முகத்தவம் புரிவதில் ஆழ்ந்திருக்கின்றனர்.

இவற்றின் விளைவாகக் கிளம்பும் திவ்ய தன்மாத்திரைகள் உலகில் பூலோகத்திலிருந்து ஸத்தியலோகம் வரையிலும் ஊடுருவிச் செல்லும் ஆற்றலுள்ளவையாகையால் நம் எதிர்காலம் மிக்கநன்மை பயக்கக்கூடியது தான். இதன் அறிகுறியாகவே நம் மாகாணத்தலைநகரமாகிய சென்னையில் அடியார் ஞாயிறு கூட்டம் என்றும் ஓர் ஒப்பற்ற சங்கம் ஆவிர்ப்பவித்துள்ளது. இதன் வளர்ச்சியைக் குறித்து

ஏழை தனக்கும் அநுபூதி
ராசி தழைக்க அருள்வாயே

ஆழ்ந்து யோசிக்குமிடத்து 'ஒரு திருமுருகன் வந்தாங்குதித்தனன் உலகமுய்ய' என்றே எண்ண இடம் கொடுக்கின்றது. தன்னல இருளை ஓட்டி மெய்ஞ்ஞான ஒளியை இச்சங்கத்தின் வாயிலாகச் சகத்தில் பரப்பச் சங்கல்பம் பூண்டுள்ளான் போலும் ஞான ஸ்கந்தன்.

அவனது திருவருள் இல்லையேல் பிரதிஞாயிறும் ஆயிரக்கணக்கான தாய்மார்களும் ஆடவர்களும் அவன் புகழை ஆர்வமுடன் கேட்கக் குழுமுவார்களா? என்றுவரும் ஞாயிற்றுக்கிழமை என ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்களா? நனவிலும் கனவிலும் தாங்கள் கூட்டத்தில் செவிகுளிரக் கேட்ட அரும்பெரும் விஷயங்களையே குறித்து மனதில் எண்ணிக் கொண்டிருப்பார்களா? எல்லாம் மறந்து முருகன், குமரன், குகன் என மொழிந்து அகம் குழைந்து நிற்பார்களா? புளகாங்கிதம் பூண்டு ஆனந்த வாரிபொழிந்து தற்போதமிழந்து பரவசமடைந்து இருப்பார்களா? என்னே முருகன் பெருமை! என்னே முருகன் அருள்! என்னே நம்மிறைவனது இரக்கம்!

தவிர, அநுபவமே எல்லா ஞானத்திற்கும் ஆதாரம். ஆதலாற்றான் அநுபூதி விளக்கவுரையே இச்சங்கத்தின்கண் முதன்மையான ஸ்தானம் பெற்றோங்கியது. இது எவ்வளவு பொருத்தமானது! அநுபூதிமான்களின் சொற்பொழிவுகள்தான் கேட்போரகத்தினில் பசுமரத்தாணி போல் பதியும். அவர்களின் நெஞ்சத்தை நெகிழ்ந்துருகச் செய்யும். அநுபூதி அருள்வது ஆண்டவனின் செயல். யார் யாருக்கு அருள விரும்புகின்றானோ அவரவர்தான் அதனைப்பெறுவர். அடியார்களின் சித்தங்களைக் கரைய

ஆரமுதமான சர்க்கரை தேனே
ஆன அநுபூதியைத் தருவாயே

வைக்கும் ஆற்றலைக் கவனிக்கும்போது செவ்வேட்பரமன் தன்திருவருளை திருப்புகழ்மணிமீது பொழிந்திருக்கின்றான் என்பது நன்கு விளங்கும். அது மாத்திரமா, முருகனே திருப்புகழ்மணி மூகத்தால் மறைப்பொருளை பிரதி ஞாயிறும் மொழிந்து வருகின்றான் என்னும் ரகசியமான ஷயம் அறுமுகன் அடியார்கட்குத் தெற்றெனவிளங்கும். முருகன் இன்னும் என்னென்ன லீலைகள் புரியப்போகி றான் என்பதையும் அவர்கள் பின்னால் உணர்வார்கள்.

— ஓம் தத் சத் —

ஸ்ரீ அருணகிரியார்

(வே. து)

தென்னிந்தியாவில் 6ம் நூற்றாண்டு முதல் 10ம் நூற்றாண்டு வரை நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி சைன, பௌத்த மதங்களை நம் நாட்டிலிருந்து அகற்ற முயன்றனர்.

10ம் நூற்றாண்டுக்குப்பின் சைவ வைணவப் பூசல்கள் மலிந்தன. மக்கள் பிரிவினையால் உள்நாட்டுக்குழப்பங்கள் பெருகின. இக்குழப்பத்தைப் போக்க ஆண்டவன் அனுப் பிய தூதரே திருப்புகழ் இயற்றிய அருணகிரி நாதர் ஆவார்.

இவர் முருகப் பெருமானைப் பாடிய குறிப்புக்கள் சைவ வைணவ சமரசத்துக்கான முயற்சியை மேற் கொண்டார் என்பதை அறிவிக்கும். திருப்புகழ் பாடல் பலவற்றுள் முருகனை மாயோன் மருகன் என்றும், சிவன்

யானெனதற்றிடு போதம்
யானறிதற்கு அருள்வாயே

மகன் என்றும், பார்வதியைத் திருமாலின் தங்கை என்றும், திருமாலைச் சிவ பெருமான் சக்தியென்றும் சைவ வைணவச் சச்சரவுக்குக் காரணமே யில்லை யென்றும், அறிவில்லாமல் சண்டையிடுவது மக்கள் தம் அழிவைத் தேடிக்கொள் வதாகு மென்றும் விரிவாகப் பாடியிருக்கிறார். ஆயினும் அவர் எழுதிய நூலைப் படிக்கும் பொறுமையற்ற மக்கள் தமக்குள் சச்சர விடுவதை விட்டு விடவில்லை. இனியேனும் தமிழகத்தார் திருப்புகழைப் பொருளறிந்து கற்று, சமயச் சண்டையின்றிச் சமரசமாக வாழச் செந்திலாண்டவன் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

ஒருமைப்பாடு

(செ. பொ. புவனகிரி)

ஒருமைப்பாடு என்பது சாதாரணமாக மனித ஈட்டத்தில் மிக மிக மிளிர்தல் வேண்டும். ஒன்றுபட்டிருத்தலே ஒருமைப்பாடு. வாழ்வில் மனிதரெல்லாம் ஒன்றுபட்டு, ஒருவன் துன்புற்றால் மனித ஈட்டமே துன்புறும் நிலையில் இருக்கவேண்டும். மனிதன் மனிதருக்குள்ளே ஒருமைப்பட்டால்தான் ஆண்டவனிடத்தும் ஒருமை காணலாம். ஒருவனே எல்லா உயிரிடத்தும் ஒருமைப்பட வேண்டும். ஒருமைப்பாட்டைக் காணவேண்டும். ஒருமைப்பாடே ஐக்கியம். அது நீயாதல். நீ யதுவாதல். இதுவே ஒருமைப்பாடு. இரண்டறக்கலத்தலே ஒருமைப்பாடு. அந்த ஒருமைப் பாட்டிலே தான் எல்லாம் கைகூடும். வண்டியோட்டுகிறான் ஒருவன். மாடு வண்டியை இழுக்கிறது. வண்டியை ஓட்டுகிறவன் மாட்டின் நிலையிலிருந்து பார்க்கவேண்டும். அப்பொழுது மாடு துன்புறும் நிலை அவனுக்குத் தெரியும். தெரிந்தவன் மாட்டைத் துன்புறுத்த

மாட்டான். இந்தப் பச்சாத்தாபம், காருண்யம், கருணை உண்டான பொழுதுதான் ஒருமை நம் மனதில் தோன்றும். அந்த ஒருமையே நமக்கு வேண்டும். ஒவ்வொன்றிலும் நாம் அது அதுவாக இருந்து அவ்வவற்றின் நிலையை உணரவேண்டும். ஒரே உயிர்: உயிரே மாட்டின் கூட்டிற்குள் போகிறது. உயிரே மனிதன் கூட்டிற்குள் செல்கிறது. மாட்டின் கூட்டிலும் மனிதன் கூட்டிலும் ஒரே உயிர். அது மாடு. இது மனிதன். அந்த மாட்டை அடித்தால் உயிர் துன்புறும். அந்த உயிர் அதனிலும் இருப்பது. உன்னிலும் இருப்பது. மற்று எதனிலும் இருப்பது. எனவே மாட்டைத் துன்புறுத்திய நீயே துன்புறுத்தப்பட்டவன்தானே. தானே ஒவ்வொரு உருவாயிருந்து, அதனதன் நிலையை உணர்ந்து ஒவ்வொன்றினிடத்தும் ஒன்றுபடவேண்டும் ஒருவன் தன் மனைவியின் நிலையை உணரவேண்டும். அவள் அவன் நிலையை உணரவேண்டும். அடுத்து அவர்களுக்குள் வருவது அன்பின்பிடி. அந்தப் பிடியினின்றும் இருவரில் ஒருவரும் விலகார். விலகவும் இயலாது.

அர்த்த நாரி உருவினைப்போல இரண்டறக்கலந்து விளங்க வேண்டும் கணவனும் மனைவியும். இப்படியே வீட்டிலுள்ளோர் யாவரும் ஒன்றுபடவேண்டும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. சமுதாய, சமய, மத ஒருமைப்பாடுகள் அவசியம் வளரவேண்டும் இவைகளால் உண்டாவதுதான் நாகரீகம், பண்பாடு, சீர்மை.

சர்வமத சகோதரத்வமே ஒருமைப்பாடு. ‘எம்மதமும் சம்மதமே இங்கு’ என்று நமது இராமலிங்கம் சொன்னார். கடைப்பிடித்தார். அவர் போதித்ததே ஒருமைப்பாட்டைத்தான். இவ்வுலகில் எத்தனை மதங்கள்! ஆ! சொல்லற்கரியன. ஒருவனை நல்வழியில் நடத்திடவே மதங்கள் ஏற்பட்டன. இன்று! மதங்கள் மதம் பிடித்தலைகின்றன. சைவன்யார்? உயிருள்ள ஒவ்வொன்றையும் கடவுள் என வழிபடுவோன். உலகத்தையும் உலகிலுள்ளவற்றையும்

அருமறை யாற் பெறற்கு அரிதாய
அனிதய வார்த்தையைப் பெறுவேனோ

தொழுவோன் வைணவன். யாவற்றையும் ஆன்மமயமாக உணருபவன் வேதாந்தி. புத்தன் பந்தத்தை அறுத்தவன். இவைகளின் முடிவு ஒரே முடிவுதான். ஆனால் இந்தப் பல்வேறு மதங்கள், சாதிகள் உலகம் தோன்றிய நாளில் இருந்தனவா? அந்நாளில் ஒருமைப்பாட்டோடு உலகம் இருந்தது. உலகத்தைக் கோயிலாகவும், உயிரினங்கள் திருமேனியாகவும், ஆன்மாவே இறையாகவும் நினைந்திடல் வேண்டும். வழிபட வேண்டும்

இவைகளுக்கும் அப்பாற்பட்டதுதான் ஆண்டவன் ஆன்ம ஒருமைப்பாடு. எப்பொருள் எத்தன்மையதானலும் அப்பொருளில் மெய்ப்பொருள் காணவேண்டும். காண்பதே மேல். திருமணத்தை விரும்பிப் பெண் பார்க்கப்போகும் ஒருவன் பெண் கருப்பா? சிவப்பா? என்று பார்ப்பது சரியல்ல. பெண் பார்ப்பவனுக்கு மெய்ப் பொருள் குணம். அதுபோலவே மற்றெல்லாவற்றிலும். வெளித் தோற்றத்தைக் கண்டோ, நிறத்தைக் கண்டோ மயங்கல் கூடாது. எனவே ஆன்மாவைப் பற்றிய தெளிவு வேண்டும். தானே தானுக வேண்டும். உண்மை ஒன்றே. உருவம் பல. எந்த உருவத்தைக் கொண்டாலும் சேர்வது ஒரே உண்மைக்குத்தானே. ஆகவே இரண்டறக்கலத்தல், ஒருமைப்பாடு மிக முக்கியமான ஒன்றல்லவா? முன்னோர் இதையே சொல்லினர். வருங்கால மக்களறிய ஏட்டுச் சுவடியில் ஏற்றினர் தாம் தாம் கண்ட முடிவை. கல்விவேண்டும் என்போன் புத்தகத்தையன்றோ படிக்கவேண்டும். உண்மைதான் வேண்டும் என்போன் தன்னுள் தன்னை ஆராய்ந்தால்?......உண்மை தெரிகிறது. இயேசு சொல்கிறார், 'நீங்களே கடவுள்' என்று.

ஒருமைப்பட வழி சொல்கிறார் வள்ளல் இராமலிங்கம். "நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து, ஊற்றெழும் கண்ணீரதனல் உடம்பு நனைந்து நனைந்து......ஏத்தும்" என்று கடவுளிடம் ஒன்று பட்ட

நாடோறு மேன்மை படைத் திடவேதான்
நாயேனையாள நினைத்தி டொணுதோ

வரின் நினைப்பிது. செயலிது. தேவையான ஒருமைப்பாட்டை நாமும் கைக்கொண்டு எல்லா உயிரிடத்தும் ஒன்றி அவைகளிடத்து அன்பு காட்டி ஒன்றுபட்டவராக வேண்டும்.

ஙீஸிர்க! ஒருமை.

ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்

9-ஆம் படி

V. S. வேங்கடராமன்.

பிள்ளைப் பெருமானது பெருவிளையாட்டு

(அ) கனவிலும் முகமனுரை. கண்ணன் யசோதையின் பக்கத்தில் துயின்றருளினார். துயிலில் கனவு காட்டினார். சம்போ! மகாதேவா! நல்வரவு. பத்மாஸனா! இங்கே இடது பக்கம் உட்காரும். முருகா! நலந்தானே! தேவேந்திரா! சௌக்கியமா! குபேரா! காணவே முடியவில்லையே. இப்படி உளறுவது போல் பாற்கடலில் பக்தரை வரவேற்கிறார். யசோதை இவற்றைக்கேட்டுக் குழந்தாய்! என்ன உளறுகிறாய். தூ! தூ! எதையோகண்டு பயப்பட்டு உளறுகிறது குழந்தை; என்று சொல்லிக் கொண்டாள். யசோதையா பகவானது லீலையைக் கண்டாள்?

(ஆ) கண்ணை மூடினால் இரவு. கண்ணன் கண்களை மூடிக்கொண்டால் உலகம் சர்வ ஸம்ஹாரகால ராத்திரியை அடையும். அது உண்மை.

நெடிய புகழ் சோலைக் குயிலாலே

நிலைமைகெடு மானைத் தழுவாயே

ஒரு சமயத்தில் கண்ணன் யசோதையிடம் வந்தார். அம்மா! என்றழைத்தார், யசோதை கண்ணனை நோக்கி என்ன அது நாதா! சொல்; என்றாள்.

க :— பால் கிண்ணம் வேண்டும்

ய :— கிண்ணத்தை வைத்துக்கொண்டு என்னடா செய்யப்போகிறாய்.

க :— பால் குடிக்க.

ய ;— பால் கறக்கவில்லையே. இப்போது பாலில்லையே.

க :— எப்போது பால் வரும்.

ய :— இராத்திரி பால் வரும்.

க :— இரவு எப்போது.

ய :— இருள் எப்போது வருமோ அப்போது.

கண்ணன் கண்களை மூடிக்கொண்டு, "இரவும் வந்தது பால் கொடு" என்று யசோதையின் முன்றானை மேலாக்கைப் பிடித்திழுத்தார்.

இரவு கண்ணை மூடினால் வரும் என்பதை யசோதை கண்டாளா!

(இ) பால் குடிக்க முடி வளரும். (உண்மையில் பாலில் ஈயச்சத்து உள்ளது. ஈயச்சத்தினால் முடி வளரும்.)

கண்ணன் பால் குடிக்கவேமாட்டேன் என்று பாடுபடுத்தினார். யசோதை தந்திரமொன்று செய்தாள். அண்ணா பலராமன் யமுனை மணலுக்கு விளையாடப் போய் விட்டானே. நீயும் பால் குடித்து விட்டு விளையாடப் போ. ஹரே! உன் குடுமி மிக நீளுமடா! பால் குடித்

தால் முடி நிறைய வளரும், என்று யசோதை சொன்னாள். கண்ணன் பாதிப்பாலைக் குடித்ததும் தன் குடுமியைத் தொட்டுப்பார்த்துக்கொண்டே என் குடுமி வளர்ந்து நீண்டதா பார்த்துச் சொல் என்றார். சுருணீள் குழலன் கேசவன் கண்ணன் என்பதை யசோதை கண்டாளா!

(ஈ) யாரம்மா! கண்ணைப்பிடுங்கிவைத்தது! சிரஞ்ஜீவியாயிரு! கண் திருஷ்டி விழுந்து விட்டது. யசோதை கண்ணன் வயிற்றைத் தொட்டுக் கொண்டே, மப்புப் போலிருக்கிறது; வெண்ணெய் கல்லாக இருக்கிறதோ, வயிற்றிரைச்சல்கண்டு பால் வயிற்றினுள் டொக்டொக் என்கிறது. வெள்ளிமலை வெண்ணெயையும், பாற்கடல் பாலையும் குடிப்பதை யாரேனும் பார்த்து விட்டார்களோ என்னவோ. அஜீரணமாக இருக்கப்போகிறதே, என்று கவலை கொண்டு, தூ! தூ! என்று கண்மிச்சில் போக்கி "நீ சிரஞ்ஜீவி யாயிரு" என்று வாழ்த்தினாள். கண்ணன் வேண்டுமென்றே அஜீரண நிலையைத் திருப்தி சொல்லக் காட்டியதை யசோதை கண்டாளா!

(உ) வில்லெடு லக்ஷ்மணா! ஒருசமயத்தில் யசோதை தன் குழந்தையைப் பக்கத்தில் படுக்கவைத்துத் தூங்கப் பண்ணக்கதை சொல்ல ஆரம்பித்து, முன்காலத்தில் ராஜா ராமன் என்று ஒருவனிருந்தான், என்று குரலை நீட்டிச் சொன்னாள்.

கண்ணன் :— உம்

யசோதை :— அந்த ராமனுக்குச் சீதை என்று ஒரு பெண்டாட்டி.

கண்ணன் :— உம்

ஆலியுறை கூட்டில் ஞானமறை யூட்டி
யானநிலை காட்டி அருள்வாயே

ய:— அவர்கள் அப்பா சொல்லப் பஞ்சவடி வனத்திற்குப் போனார்கள். உலாவி விளையாடிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சீதையை இராவணன் தூக்கிக் கொண்டு போனான்; என்று சொன்னதும் உம் போட்டுக் கொண்டு கண்ணை மூடிக் கொண்டிருந்த கண்ணன், லக்ஷ்மணா! அவசரம்! அவசரம்! வில்லெடு! வில்லெடு என்றே எழுந்திருந்தார். கண்ணன் பூர்வாவதாரச் செயலை நினைவூட்டினார் என்று யசோதை கண்டாளா!

(ஊ) நீலமுழுமதி வெண்முழு மதியைக் கேட்டது. யசோதைபெற்ற புகழ்க்கடலில் தோன்றிய நீலமுழுமதியாகிய கண்ண பிரானை தந்தையாகிய நந்தகோபர் தூக்கிவைத்துக் கொண்டு கண்ணனுக்கு அம்புலி மாமா காட்டினார், ஒரு கிளை நுனியில் கண்ணன் பூர்ணசந்திரனைக்கண்டு பழம் அப்பா பறித்துத்தா! தரமாட்டாயா! என்று கேட்டார். நந்தகோபர் கண்ணனைப் பார்த்து! கண்ணா! நீ கையால் எட்டி அப்பழத்தைப் பறி என்றார். கண்ணனும் வெள்ளை ப்ளம்ஸ் ஆன அந்தப் பூரண சந்திரனைக் கையால் பறிக்க எழும்பி வயிற்றை எக்கிக் கொண்டு கைகளை உயர்த்தவே அந்த முழுச்சந்திரனும், கண்ணன் கைக்கு வந்துவிட உடம்புக்கு நேராகக்கையில் சந்திரனை வைத்துக் கொள்ளடார்ச்சுலைட்டுக்கு நேர் பிடித்த மகேந்திர நீலக்கல் போலக் கண்ணன் திருமேனி வெண்ணிலாவில் ஒளிவீசியது. பகவானது விராட் சொரூபம் விளங்கிற்று. நந்த கோபரை ஒருக்ஷணம் பிரமாநந்தக் கடலிலும், ஒரு நிமிஷம் புத்திர வாற்சலியக்கடலிலும் மாற்றி மாற்றி முழுக வைத்துக் கொண்டிருந்த கண்ணன் மாயையை யாரே கண்டார்.

தொலைவில் பிறவியும் அகல ஒரு மவுன பரமசுக
சத்தப் பெரும்பதஞ் சித்திக்க அன்புடன் சிந்தியாதோ

(எ) பெண்களாகக் கொடுக்கட்டும். பெண்களைக் கேட்கக்கூடாது. என்னே பெண்ணின் பெருமை. கண்ணனுக்கு அதிகாலையில் தயிர்கடையுஞ் சத்தமும் மகளிரது வளையல்களின் ஒலியும் கேட்டால் போதும். உடனே தூக்கங் கலைந்துவிடும். முந்தின வாமனாவதாரத்தில் மகாபலியின் வீட்டில் யாசகத்தைச் செய்தேன். அவன் சக்கரவர்த்தி நம்பங்கு கொண்டவன் அஃதிருக்கட்டும். மறுபடியும் இந்த அவதாரத்தில் பெண்கள் முன்னிலையில் வெண்ணெய் கொடு, பால் கொடு, நெய் கொடு, தயிர் தா, என்றெல்லாம் கேட்கவே மாட்டேன், என்று எண்ணங் கொண்டவர் போலக் காலடிச் சத்தமும் கேட்காதவாறு மெல்ல இடைச்சியர் வீடுகட்குச் சென்று என் வாய் வெளித்தள்ளும் மூச்சுக்காற்றுக்கு எந்த விளக்கு அணையாது போம், உலகமே பறக்குமே, என்பார் போல் எல்லா விளக்குகளையும் அணைத்துவிட்டு, எருமை வெண்ணெய் வெள்ளிமலையாரே என் வயிற்றிலிருங்கள் என்று முழுவுருண்டையை ஒரு விழுங்காக விழுங்கிப் பசுவெண்ணெய்ப் பொன்மலையாரே! வயிற்றுக்குள்ளே போங்கள் என்று சொல்லிக்கொண்டு இன்னொருருண்டையினையும் உரிமையுடன் விழுங்கி அனுக்கிரஹித்தார்.

இப்படிச் செய்ததனால் உண்மையான கோபமோ துன்பமோ அக்கோபிகைகளுக்கு உண்டாகவில்லை. கண்ணன்றான் அவர்கள் மனத்தையுந் திருடி மகிழ்ச்சிக்கடலில் முழுகவடித்து விட்டனரே.

(தொடரும்)

இணைகரம் ஆறும் ஆறும் அறுமுக நீப மார்பும்
இருகழல் தானு நானு மறவேனே

கொயிலாண்டியில் குமார ஷஷ்டி விழா

சென்ற 25—11—49-ல் வெள்ளியன்று மலையாள ஜில்லாவில் பந்தலாயினி என்னும் இரயில் நிலையத்திற்குச் சமீபமான கொயிலாண்டியில் வழக்கறிஞர் திருவாளர் கே. ஆர். நாராயண ஐயர் அவர்களின் இல்லமாகிய குமார ஸதனத்தில் குமார ஷஷ்டி பூஜை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் பாலக்காடு, திருச்சூர், திரூர், கூனூர், கள்ளிக்கோட்டை, தலைச்சேரி, கண்ணனூர் முதலான பலவிடங்களினின்றும் அநேக முருகனடியார்கள் விஜயம் செய்திருந்தனர்.

அன்று அதிகாலையில் தவச்செல்வராகிய ஸ்ரீ மான் தளிப்பறம்பு நீலகண்ட ஐயர் குமாரன் விழா இடையூறின்றி நடந்தேறும் பொருட்டு மஹாகணபதி ஹோமத்தை விதிப்படிச் சிரத்தையுடன் நடத்திவைத்தார். ஆறுவாகனனின் அருளை வேண்டிக்கொண்ட பின்னர் அன்பர்கள் யாவரும் ஆண்டவன் சன்னிதியில் வீற்றிருந்து ருத்ராபிஷேக வைபவத்தைக் கண்டு களிப்புற்றனர். தீபாராதனை சமயத்தில் ஆங்கு குழுமியிருந்த அடியார்கள் அனைவரும் ஆர்வமுடன் ஹர ஹரோ ஹர நாமாவளியை ஆர்ப்பரித்தனர்.

பின்னர் பிராம்மண ஸந்தர்ப்பணை நடந்தேறியது. அமுதருந்திய பின்னர் உடுப்பி ஸுப்ரம்மண்ய க்ஷேத்திரத்தில் நடைபெறும வழக்கத்தைப் பின்பற்றி “ஆதி ஸுப்ரம்மண்ய பாதாரவிந்தத்திற்குக் கோவிந்தா, கோவிந்தா” என்ற திவ்ய புண்டரீகத்தை உரக்க உச்சரித்துக்கொண்டு அன்பர்கள் போஜனம் செய்த இலைகள் மீது அநேக அடியார்கள் சயனப் பிரதக்ஷிணம் செய்தனர். அதன் பின்னர் ஒருமணி நேரம் அகண்டமாய் முருக நாம ஜபம் நடைபெற்றது.

உலகமும் புரந்த பெருமாளே
பொனிலகு நின் பதங்கள் மறவேனே.

மாலையில் திருவில்வாமலை ஸ்ரீ இலக்ஷ்மண சாஸ்திரிகள் குமரனின் திருவவதாரத்தைக் குறித்து உபந்யஸித்தார். அதன்மேல் தலைச்சேரி வக்கீல் ஸ்ரீமான் சங்கர ஐயரும், மஹாபக்தனாகிய தலைச்சேரி ஸமஸ்கிருதபண்டிதரும் ஹிந்து தர்மத்தைப்பற்றி அரிய சொற்பொழிவுகளை ஆற்றினார்கள்.

பொழுது சாய்ந்ததும் குமரன் பூஜை மறுபடியும் ஆரம்பமாயிற்று. ஸஹஸ்ர நாம அருச்சனையை ஸ்ரீமான் சிவஸ்வாமி அய்யர் தமது இனிய பக்தி ரஸமூட்டும் குரலில் பல இராகங்களில் இசைத்து ஓதினார். ஒலிபரப்புங் கருவியும் இத்தருணத்தில் உபயோகப்படுத்தப்பட்டது. பின்னர் பானக பூஜைப் பாடல்களைப் பல சீரில் கேட்போரகம் நெகிழ்ந்துருகும்படிப் பாடினார். கள்ளிக்கோட்டை பஜனை சபையார் அநேக முருக நாமவளியை அன்புடன்பாடினர். அதன்மேல் எண்ணப்பாடம் திரு. வேங்கடராம பாகவதர் வடகரை ஸ்ரீ ஸுப்ரம் மண்ய பாகவதர், திருச்சி பி. எஸ். இராம ஐயர், மணி ஐயர், நடராஜ பந்தலு முதலோனோர் முருக கீர்த்தனங்களையும், திருப்புகழையும் வெகுநேரம் பாடினார்கள். முருக நாமோச்சாரணத் துவனியால் குமார ஸதனத்துள்ள வாதாவரணம் முற்றிலும் தூய்மையெய்தி விட்டது.

பின்னர் விடியற்காலமாகும் போது ஆனைமலைரோட் என். எஸ். இராமச்சந்திர ஐயர் பக்தர்களின் பாததூளியின் மகிமையைப்பற்றி சிறிது புகன்ற பின்னர் தாஸா சரணத்தை நடத்தினார். கடைசியாக மங்களா சரணம் நடைபெற்றது. உலக க்ஷேமத்திற்காக வாழ்த்துக்கள் கூறப்பட்டன. குறைகளைப் பொறுத்தருளுமாறு குமரனிடம் வேண்டிக்கொண்டு இவ்வருடத்திய குமாரஷஷ்டி விழா இனிது முற்றுப்பெற்றது.

உலகினெறி யாசைப் பாடற நிலைபெறுஞானத் தானனி
உனதடியாரைச் சேர்வதும் ஒரு நாளே

தன்வந்திரி பகவான்

(தாஸன்)

ஆயுள்வேத பண்டிதர்கள் சென்ற மாதம் இவரது ஐயந்தியைக் கொண்டாடினார்கள். மனிதன் நோய்வாய்ப் படில் அதற்கான சிகிச்சாமுறைகள், அதற்கான அவுஷதங்கள், முதலியவற்றை ஏராளமாக இவர் செய்துள்ள நூல்கள் வாயிலாக அறியலாம். இவர் சமஸ்கிருதபாஷையில் நூல்கள் பாடியிருப்பினும், இவருக்கு அநேக பாஷைகள் கீர்வாணம், இத்தாலி, பாளபந்து முதலியவை முக்கியமாக வரும் என்று தெரிகிறது. இவர் கன்னட பாஷையிலும் ஏராளமான வைத்திய நூல்கள் செய்திருக்கிறார். அநேகருக்கு இவர் தமிழிலும் வல்லவர் என்பதும் அவர் தமிழிலும் வைத்தியமுறைகள் பாடியுள்ளார் என்பதும் தெரியாது.

தவிற தற்காலத்திய புலவர்கள் பேராசிரியர்கள் போல அக்காலத்தில் கவிஞர்கள் தமது வாழ்க்கையைப் பற்றியோ தம்மைச் சிறப்பித்தோ யாதும் கூறியுள்ளதாகத் தெரியவில்லை. ஆனால் அத்தகைய பெரியோர்கள் தவசிகள், முனிகளைப்பற்றி அவர்கள் இயற்றியுள்ள சாத்திரங்களினின்றும், மற்றும் அவர்களது காலத்தில் இருந்து வந்த அவர்களைப்போன்ற இதர முனிவர்கள் நூல்களாலும், அல்லது அவரது சிடவர்க்கங்கள் இயற்றியுள்ள நூல்கள் வாயிலாகவும் ஒருவாறு அறியமுடிகிறது. அவ்வாறே தமிழ் நூல்களில் இவரைப்பற்றிக்காணும் வரலாற்றினை இங்கு கூறுவோம்.

சொற்கள்பல நாவினில் தொட்டு உன் இருதாள் தொழ
சொற்கமல வாழ்வுசற்று அருள்வாயே

தன்வந்தரி பகவான் மகாவிஷ்ணுவின் அம்சங்கள் நிரம்பப்பெற்று அவரது காலத்திற்குப்பிறகு 32-வது தலை முறையில் அவதரித்தவர். இவர் முறையே சகல சாஸ்த்திரங்களிலும் மகா பாண்டித்யம் வாய்ந்தவர். இவர் முக்கியமாக வான சாஸ்திரத்தில் நிபுணர் என்றும் பன்னிரண்டு ராசிகளின் விபரங்கள், பதினொன்று கரணங்கள், 27 யோகங்கள் இவைகள் எவை எப்படி ஏற்படுகிறது, அவற்றின் பலன் ஒரு குறிப்பிட்டகாலத்தில் ஜனித்த ஓர் பிராணியின்கண் எப்படி ஏற்படும் என்பதாக கீர்வாண பாஷையில் நூல்கள் செய்திருப்பதாகத் தெரிகிறது. பொதுவாக ஆயுர்வேதத்தில் மட்டில் கியாதி வாய்ந்தவராகக் கருதப்படும் இவர் மேற்கண்ட வான சாஸ்திரத்திலும் வல்லவர் என்பதை நூல்கள் வாயிலாக அறியும்போது ஆச்சரியத்தைக் விளைவிக்கிறதன்றோ! இதைப்பற்றி கீர்வாண பாஷைகளில் வல்லவர்கள் ஆராய்ச்சி நடத்தி அறிவிக்கட்டும்.

தவிர இவர் அகஸ்திய பகவானுடன் பொதிகையில் சில காலம் வாழ்ந்து வந்ததாகவும் அப்போது 3 லட்சம் கிரந்தங்கள் செய்திருப்பதாகவும் தெரிகிறது. அவைகள் முறையே சரியை, கிரியை, ஞானம், யோகம் என்பவற்றை மட்டுமின்றி ஆயுர்வேத சிகிச்சா முறைகளும் அவுஷதங்கள் தயாரிப்பு முறைகள் அவற்றின் குணங்கள் முதலியவற்றையும் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

மேலும் நூல்களில் இவரைப்பற்றிக் கூறும் போதெல்லாம் "வேதாந்த தன்வந்தரி" என்று கூறப்பட்டிருப்பதால் இவர் ஓர் ஒப்பற்ற தவசி-ஞானியென்று ஏற்படுகிறது. 800 வருடம் ஜீவித்திருந்து இவர் காய கல்பம் உண்டு

விசையான தோகை துங்க மயிலேறி யோடிவந்து
வெளிஞான வீடு தந்து அருள்வாயே

மூன்று முறை சமாதிக்குள் சென்று திரும்பி வந்ததாகத் தெரிகிறது. மூன்ருவது முறை இவர் சமாதியில் 60 வருஷ காலம் இருந்து பிறகு வெளிவந்ததாகவும் தெரிகிறது. இவருக்கு 1000 சிஷ்யர்கள் என்றும் அவர்களுள் முக்கியமானவர்கள் அசுவினியும் விசுவினியும் என்றும், இவர்கள் மற்ற சீடர்களுடன் சமாதி வாயிலில் வெகுகாலம் பூசைசெய்து காத்திருந்து பிரார்த்தித்த பின்னரே தன்வந்தரிபகவான் சமாதியிலிருந்து வெளியேவந்தார் என்றும், இப்போது அவரைக் காண அகஸ்திய பகவானும் நந்திசமாமுனியும் வலப்புறத்தில் காத்திருந்தார்கள் என்றும் தெரிகிறது. மற்றும் இவர்சமாதியைவிட்டு வெளிவந்தசமயம் சில அதிசயங்கள் சம்பவித்தனவாம்: சப்பாணிகள் நடந்து, குருடர்கள் பார்வையைப் பெற்று, ஊமையும் பேசினர்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. இவர் கடைசியாக இமைய கிரியை (கைலையை) நாடி ஐப்பசிமீ புனர்வசு நட்சத்திரம் கூடிய நன்னளில், சென்றதாகவும் கூறப்பட்டிருக்கிறது. இவர் அவ்வாறுசெல்லும்போது சிஷ்வர்கத்தினர்கள் பின் தொடருவதை நிறுத்திக் கூறியுள்ள வசனத்தைப் பாருங்கள்.

"பாரின் மீது ஆசைவிட்டேன்; சமுசாரவாழ்க்கை யற்றேன்; மனேன்மணியை மனதில் எண்ணி வைய கத்தின் ஆசையெல்லாம் மறந்திட்டேனே-மறந்துமே ஆதித்தன் காணுத அதீத நாடு மேருகிரிபக்கல் பாதி மதி யணிந்த தம்பிரான் போல் போவனப்பா—மூச் சடங்கி சமாதி தன்னிலிருப்பேன்-மூதுலகில் மறுபடி யும் வருவதில்லை-(ஆனல்) லோக முடிவுகாலம் மட்டும்

மிகுபர மதான ஞான நெறிதனை விசாரமாக
மிகும் எனது ரூப தானம் அருள்வாயே

சீடர்கள் என்னைக்காணலாகும்-விட்டகுறை நேரு
மானல் வளமான சீடரெல்லாம் காணுவாரே
காணென்று தன்னுசை தீர்த்துமே சிற்பரனுர்பதி
போரேனென்ருர் பாரே. (போகரர் 7000).

மேலேகண்டுள்ள வசனங்கள் யாவர் மனத்தையும் உருக்கும் என்பதில் தடையில்லை இத்தகையமகாகியாதிவாய்ந்த வேதாந்த தன்வந்தரி பகவானை நினைத்தவர்கள் பவம் போம். அவரை பூசித்தவர்கள்-வேதாந்த ஞானம் அடைவார்கள். தன்வந்தரி பகவான் திருவடிகளே சரணம்.

இத்தகைய மாமுனிவர் செய்துள்ள கிரந்தங்களைப் பற்றி இதர பாஷைகளில் கூறப்பட்டுள்ளதை இந்த சஞ்சிகை வாயிலாக பண்டிதமணிகள் அறிவித்து நேயர்களை உய்விக்கக் கோருவோமாக.

இருந்தவர்.

அ. சீனிவாசராகவன்

அன்று பதினெட்டாம் பெருக்கு. காவேரிக் கரையில் ஊர்முழுதும் கூடியிருந்தது. ஒரேகும்மாளி. காவேரி இதைக் கவனித்ததாகத் தெரிய வில்லை. நுரை மலர்கள் அசைந்தாடிச் சுழல, இருகரையும் ஒன்ருய்ப் பொங்கி, நிமிர்ந்த கம்பீரமான நடையோடு அவள் போய்க் கொண்டிருந்தாள். ஆனல் கூட்டத்தில் இருந்த கோலாகலத்திற் கெல்லாம் உண்மையில் அவள்தானே காரணம்? செக்கச் செவேல் என்று வண்டலை வாரிப் புரண்டு சென்ற அந்தப் புனல்

நாடி ஓராயிரம் வந்த தாமரை மீதில் அமர்ந்த
நாயகர் பாதமிரண்டும் அடைவேனே

வெள்ளம் மாத்திரம், வாய்க்காலில் நுழைந்து; மதகடியில் மூனகி, அணைக்குள்ளே சிறைப்பட்டு, எங்கும் பரந்து, தன்னையே மற்றவர்களுக்குத் தராமல் இருந்து விட்டால் வயலில் பசுமை ஏது, வாழ்க்கையில் வளந்தான் ஏது?

இப்படியாக எண்ணமிட்டுக் கொண்டிருந்த போது, கௌசிகி நதியைப் பற்றிய கதை ஞாபகத்திற்கு வந்தது. கௌசிகி என்பவள் காதி என்ற அரசன் மகள். ரிசீகன் என்ற முனிவனைக் கணவனாக அடைகிறாள். ஆனால் அவனோடு நெடுங் காலம் ஒன்றாக வாழ்ந்து இன்பம் பெற அவளுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ரிசீகன் தவத்திலே ஈடுபட்டு, பிரமலோகம் செல்கிறான். இந்தப்பிரிவு கௌசிகியின் மனதைச் சுடுகிறது. கணவனைப் பிரிந்த தாபத்தைத் தாங்க முடியாமல் அவள் வேதனைப் படுகிறாள். ரிசீகனைத் தொடர்ந்து செல்கிறாள். பிரமலோகத்திற்குப் போகும் வழியில், தன்னைத் தொடர்ந்து வரும் கௌசிகியைப் பார்த்த ரிசீகன், அவளை நதியாக ஆகும்படி கட்டளையிட்டு மறைகிறான். அன்று தொட்டு இந்த மண்ணுலகில் கௌசிகி, நதி வடிவத்தில் வாழ்ந்து வருகிறாள். இதுதான் கதை. கதையை முதலில் ராமாயணத்தில் நான் படித்தபோது எனக்கு வேதனையாக இருந்தது. கௌசிகியின் துயரம் எவ்வளவு இயற்கையானது, அவள் புருஷனைத் தொடர்ந்து சென்றதில் தவறு என்ன, எதற்காக அவளை நதியாக மாற்றினான் ரிசீகன் என்றெல்லாம் என்னையே கேட்டுக் கொண்டேன். கௌசிகியின் மென்மையான பெண் உள்ளத்தை இப்படியா தண்டிப்பது, இது என்ன கொடுமையான தண்டனை என்றும் நினைத்தேன். இதே எண்ணங்கள் மறுபடியும் மனத்

மாகத மயில்மிசை வருமுருகனும் என
வாழ்கைக் கொரன்புந் தருவாயே

நிலே தோன்றின. பழைய வேதனை தலைதூக்கியது. காவேரி வெள்ளத்தைப் பார்த்தேன்.

கலகலவென்று சிரித்து, புனற்கையை ஒய்யாரமாக வீசி அவள் நடந்து கொண்டிருந்தாள். கௌசிகி நதியும் இப்போது இப்படித்தான் இருப்பாளோ? காவேரியின் பெருமிதத்திற்கும், களிப்புக்கும் காரணம் என்ன? தன்னை மற்றவர்களுக்காக அர்ப்பணம் செய்து அவர்களுக்காகவே வாழ்கிருள். இதில்தான் பூரண இன்பம் சித்தியாகிறதோ? 'ஆம்' என்று ஒலித்தது காவேரியின் அலைச்சிலம்பு. கௌசிகி நதியின் கதையிலே உள்ள தத்துவத்தின் பெருமையும் எனக்கு விளங்கியது. ரிசீகன் ஏதோ கௌசிகியைக் கொடுமையாக நடத்தி விட்டதாக எண்ணினேனே, அது தவறு என்று தோன்றியது. கௌசிகியின் தாபத்திற்கு மருந்தை ரிசீகன் தந்தான். அவளை

பாரிலத்து உறுகண் நீக்கப்
போதுக நதியாய்

என்று நியமித்தான். பிறர் துன்பத்தைத் துடைப்பதும், அவர்கள் நலத்தில் நம்மை இழந்து விடுவதுமே, நம்முடைய சொந்தத் துயரங்களையும், சிறுமைகளையும் போக்குவதற்கு வழி; இதை அறிந்துதான் ரிசீகன் இப்படிச் செய்திருக்க வேண்டும் என்று எனக்குப் புலப்பட்டது.

ஆமாம். ஆனல் இந்தக் காவேரி நதி கடைசியில் வெறுங்கையோடு அல்லவா கடலில் கலக்கிருள்? தன்னையே இப்படி அழித்துக் கொள்வது சரியா? பிறருக்கு உதவலாம், அதிலே இன்பம் காணலாம், ஆனல் உதவி

இருவினை நலிய மெய்த்திறலுடன் அறிவு கெட்டு
இடர்படுவது கெடுத்து அருள்வாயே

செய்வதற்கு எல்லை கிடையாதா? இதற்கு பதில் தருகிறது இன்னொரு கதை. கம்பராமாயணத்தில் கௌசிகி நதி வரலாற்றை அடுத்து வருகிறது இது. வாமனனுக்கு மூவடி மண் தர முற்படுகிறான் மகாபலி சக்ரவர்த்தி. சுக்கிரன் தடுக்கிறான். 'கேட்டதைத் தராதே. இதில் ஏதோ சூது இருக்கிறது. ஏமாந்துபோகாதே. வாமனன் கேட்டதை நீ தந்து விட்டால், அழிந்து விடுவாய்' என்கிறான் சுக்கிரன். மகாபலி சிரிக்கிறான். 'அப்படியா? அழிந்தா போவேன்? ஆனால் அழியாதது எது? இறந்து போனவர்கள் எல்லோரும் இறந்தவர்கள் இல்லை.

'மாய்ந்தவர் மாய்ந்தவர் அல்லர்'

உயிரோடு இருப்பதாக நாம் எண்ணுகிறோமே அவர்கள் எல்லோரும் உயிர் உடையவர்களா, வாழ்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. சாவது சுலபம், அதைக்கூடச் செய்யத் தெரியாமல், கையை நீட்டிப் பிச்சை எடுத்து வாழ்கிறார்களே, அவர்கள் வாழவில்லை. அவர்கள் உயிர் இருந்தும் இறந்தவர்கள்.

'மாயாது

ஏந்திய கையோடு இரந்தவர் எந்தாய்
வீய்ந்தவர் என்பவர்'

உண்மையிலே இருப்பவர்கள் யார் தெரியுமா? எல்லையில்லாமல் தங்களிடம் உள்ளதையெல்லாம் மற்றவர்களுக்குத் தந்து, தங்களையுமே வழங்கி விடுகிறார்களே இவர்களுக்குச் சாவு கிடையாது. இவர்களே எப்போதும் இருந்தவர்.

'வீய்ந்தவர் எனினும்
ஈந்தவர் அல்லது இருந்தவர் யாரே'

இப்படிப் பேசுகிறான் மகாபலி. உண்மைதானே! வெறுங்கையோடு கடலை அடையும் காவேரி வாழ்கிறாள். செல்வத்தை, சக்தியை, உயிரையுங்கூட மற்றவர்களுக்குத் தந்துவிட்டு வெறுங்கையோடு இறைவனுடைய சந்நிதானத்தில் நிற்கிறானே அவனே என்றும் வாழ்பவன், எப்போதும் இருப்பவன். அவனை அணைப்பதற்கு, அவன் வெறுமையை வளமாக்குவதற்கு இறைவனுடைய பன்னிருகைகள் இருக்கின்றன. அவனுக்குக் குறைவு ஏது, சாவுதான் ஏது?

குமர குருபரர்

அருளிய

கந்தர்கலி வெண்பா

ரசபதி

நீர்மேல் குமிழி நிற்கிறது. அதற்குப் பொன்பூண் கட்ட எண்ணுகிறது புத்தி. காட்சி யழகென்று கருதலாம்; பூணும் சித்தமாயிருக்கலாம்; புணர்த்தும் காலம்வரை கூட பொறுக்காமல், உடைந்து விடுகிறது அந்தக் குமிழி; என்ன செய்வது! நடவா நடையது அச்செயல் என்று, அம் முயற்சியர் நாணுவது இயற்கை.

எறக்குறைய அதே நிலையது இந்த உலகம். பிள்ளைகளைப் பெறுகின்றார். பெற்ற பிள்ளைகட்குப் பெயர் வைக்க நினைக்கின்றார். பெயரோ இடுகுறிதான். அது

வெட்சிதமழ் நீப புஷ்ப வெற்றி சிறு பாத பத்மம்
மெய்க்கிருபை நீ அளிப்பது ஒருநாளே

கூட, இறுதிவரை சிலரிடம் இருப்பதில்லை. மாறியமையும் வேறு பெயர்; குறுகிவிடவும் கூடும்; இந் நாளைய கூத்து இது.

கண்ணிலாதவனுக்குக் கண்ணன் என்று பெயர். தாண்ட முடியாதவனைத் தாண்டவராயன் என்பர். ஓயாமல் சீறுகின்றார் ஒருவர்; அவருக்கு ஆறுமுகம் என்று பெயர் அமைந்துளது. இப்படியே பல சொல்லலாம். ஆக்கையோ ஒருநாள் அழிந்துபடும். எனினும், உள்ளவரை அதற்கு ஒரு பெயர் வேண்டும். அழியும் அந்த உடலுக்கு எந்த பெயரிடுவது? இதனை எண்ணி யிருந்தனர் முன்னோர்கள் என்பதற்கு, எண்ணிறந்த சான்றுகள் இருக்கின்றன.

ஆன்மாவை யாள்கிறது ஆணவ நோய்; அதனால் விளைந்தது அறியாமை. பிணியகன்றால், உயிர் மணியாகிப் பிரகாசிக்கும். ஆணவத்திலிருந்து விடுதலை யடைய இரக்கம் மிக்க இறையருளால், மாயையிலிருந்து மலர்ந்தது ஆக்கை. ஆக்கை யமைந்த நோக்கத்தை உயிர் அறியாதபடி, தாக்கு கின்ற வினைப் பெருக்கம், தன்னாட்சி செய்கிறது.

இத்துணைக்கும் தப்ப, உடலிலிருந்து உயிர்க்கின்றது உயிர். மாயையிலிருந்து வந்த உடல், விரைவில் மாய்ந்து மண்ணாகி மறைந்துவிடும். அதற்குள் செய்யும் உயிர் முயற்சிகள் பல. ஆக்கையளித்த, அகிலமளித்த அமலனை, விடுதலை கருதி நெகிழ்ந்து நினைக்கும்; திருவருளை யிடை யறாது சிந்திக்கும்; அருள் வேட்கை மிகுந்து, இறைவன் புகழைச் செவியாரக் கேட்கும்; உணர்ச்சியொடு கை கூப்பும்; கண்ணீர் வரக் கூவி யழைக்கும். இம் முயற்சி யன்றி வேறு உய்ய வழியில்லை.

வாழியினும் வறுமை கூரினும் நினது
வார் கழல் ஒழிய மொழியேனே

எங்கும் நிறைந்தவன் மங்கள வடிவ இறைவன். காரணங் கற்பனை கடந்த அவனை எப்பெயரிட்டு அழைப்பது? எக்குணன் என்று ஏத்துவது? எவ்வடிவில் வைத்து இறைஞ்சுவது? இவைகளை உணர்வதில்லை உயிர்கள். தம் மனப்பட்ட காரண கற்பனைப் பெயரிட்டு, குணங் கூறி, இறையுருவைப் பலபடி யேத்திக் கொண்டே யிருக்கும்.

'அபேத வாதிகள் ஒன்றென்றும், பேதவாதிகள் இரண்டென்றும் சொல்ல, அம்மொழிகட் கெல்லாம் இடமளித்து, ஒன்றே யென்றும், இரண்டே யெனவும் சொல்ல முடியாத சுத்தாத்வைதனே! அசைவிலாதவனே! இயல்பில் பாசம் இல்லாதவனே! அழியாத் தன்மையனே! பேரொளி மயமாய் உள்ளக் குகையில் உறையும் பெரிய பொருளே! உலகனைத்திற்கும் நிமித்த காரணனாய் நின்றோனே! உருவம் முதலியன இல்லாத உள்பொருளே! அகண்ட ஞான விண்ணாய் அமைந்தவனே! தோன்றும் நாள் சொல்ல இயலாத தொன்மையனே! எப்பொருளையும் ஆளும் ஈசனே! நரபதி சுரபதிகளை யாளும் பரம பதியே! உயிர்களது மூன்று சத்திகளை உள்ளிருந்து பிரேரிக்கும் கனிவு மிகுந்த கடவுளே! ஒளிமய தேவனாய் உயர்ந் தோனே! மேலாம் மங்கள பரசிவமே! சமம்காண இயலாத பரதெய்வமே! புருவ நடுவில் ஒளிரும் ஸ்ரீ சுப்ரஹ்மண்ய ஜோதியே!' என்று மேல் நோக்கிய உணர் வொடு கூவியழைத்துக் கும்பிடுவது உயிர்களின் இயல். இந்நிலையில், உயிர்களின் கன்மமலம் கால் சாயும். மாயையின் செயல்பலவும் ஓயும்.

அந்தியில் என்றன் வெந்துயரஞ்ச
அன்பொடலங்கழ தாவேணும்

ஒரு தலத்திற்குப் பல பெயர் உளது. அதுபோல், ஒவ்வொரு காரணம் கற்பித்து, கடவுட்குப் பலபெயரிட்டு அழைக்கும் ஆன்மா. எவ்வுருவும் இறையுருவம்: எக் குணமும் இறை குணம்; எப் பெயரும் இறை நாமம்: எம் மொழியும் இறைமொழி; எச் செயலும் இறைசெயல். இவை, உயர்ந்த உயிர்களின் நினைவு நிலை.

இடர்ப்பாடு அடையும் இம்மை வாழ்க்கையின் நடுவி லும் இறைநாமம் மறவாதிருக்க, பெற்ற மக்கட்கும் அந்த இறைவன் பெயரிட்டிருக்கும் உயிர்களின் பெருமையே பெருமை.

உயிர்களின் சிந்தனையை யறியும் சிவம். அழைப்பை யறியும் அந்த அமலன். எண்ணினர் எண்ணிய உருவங் களில், ஏத்தினர் இட்ட பெயர் தாங்கி, உரைத்த குணத் தொடு அழைத்த உயிர்களின் எதிரில் உவந்து நிற்கிறான் உமாசுதன்.

இந்நிலையில் அன்று எண்ணி யேத்தினர்; இன்று ஏத்து கின்றார்: இனியும் இறைவனைக் கூவியழைக்கும் குரல் பெரு கும். இவ்வகையாக மேலும் மேலும் அன்பு மிக்க உயிர்கள் வைக்கும் பெயரும், குணமும், வடிவும் ,பலபடி பெருகிக் கொண்டேயிருக்கும். இங்ஙனம் வந்தன வன்றி, பெயரும் குணமும் வடிவும் சொந்தமெனல், இறைவனுக்கு எந்த நாளும் இல்லை. கற்பனையில் போந்த அப்பெயர் குண உரு வங்கட் கெல்லாம் அப்பாலாய் இருக்கிறான் அந்த அமலன். கூறுகின்றார் பாருங்கள் நம் குமரகுருபரர்.

பழுதில் நிற்சொல் சொல்லி பெழுதி நித்தம் உண்மை பகர்வதற்கு நன்மை தருவாயே

" குறியுங் குணமுமொரு கோலமுமற்றெங்கும்
செறியும் பரம சிவமாய் "

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று, ஐம்புலன் கட்குப் பெயர் அமைந்துள்ளது. மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்பன அந்தக் கரணங்களின் பெயர். அந்தக்கரண உறவை ஐம்புலன்கள் கொள்ளும் அங்கிலேயில் எழுகிறது, அறியாமை கலந்த ஆன்ம அறிவு. எனவே, இதன் மூலம், அறிவு எங்கிருந்து தோன்றுகிறது என்று அறிகிறோம். அதனுடன், நூற்களை எண்ணியுருப்போட்ட கல்வியறிவு கலக்கும் கலப்பு எத்துணையிருப்பினும், மேல் நோக்கி யெழுவதற்கு வழிதெரியாத இந்த அறிவு, முன்னைய வாசனையிலிருந்து முறுகி யெழும். இவ்வளவுதான் இதன் நிலை. தோற்றமும் கலப்பும் கண்டபின், அறிவிற்கு ஆதியுண்டு என்பதை எவரும் அறிவர். இதனையறிதற்குச் சிறிது சிந்தனையே போதும். ஆதியான அறிவினுல் அறிய முடியாதவன் அமலன். அதனுல்அவன் அனுதியெனப் பெறுவன். ந + ஆதி = அனுதி. அவன்தோன்றியது என்று? எங்கிருக்கிறுன்? எப்படியிருக்கிறுன்? ஆன்மை அறிவின் துணை கொண்டு, நூலறிவின் துணைகொண்டு அவனைக் கண்டவர் யார்? காட்டுவிப்பார் உளரோ. அந்த இடத்தில் எவர் அறிவும் தோல்வியுறும். என் முடிவதில்லை. ஆன்ம அறிவு சிற்றறிவு. அவன். இயற்கைப் பேரறிவன். ஆத்மா கிஞ்ஜிக்ஞன்; அமலன் சர்வக்ஞன் என்று விளம்புகின்றது வேதம்.

குறியும் குணமும் ஒரு கோலமும் இல்லை; எனினும் நிறைந்த பரசிவமாய் எங்கும் நிற்கின்றுன். ஆன்ம அறி

முதற் பொருள் புலப்பட உணர்த்துவன் எனக்கொரு
மொழிப் பொருள் பழிப்பற அருள்வாயே

வால் அறிய முடியவில்லை; ஆனால், பேரறிவின் சொரூப மாய் எங்கும் பிரகாசிக்கிறான்; என்ன வியப்பு இது?

"குறியுங் குணமொரு கோலமுமற் றெங்கும்
செறியும் பரமசிவமாய்—அறிவுக்(கு)
அனாதியாய்",

என்று, இறைவன் இயலை சொற்சுவை பொருட்சுவை தோன்றப்பாடி? நம்மை மெய்ம்மறக்க செய்கின்றார் நம்முனிவர்.

(தொடரும்)

திருத்தணி திருப்படி திருப்புகழ் திருக்கூட்ட திருவிழா

முன் பன்னிரண்டு வருடங்களாக நடந்து வரும் இத் திருவிழா இவ்வருடமும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ திருப்புகழ் மணி.

31-12-1949 சனிக்கிழமை காலை இரயில் அதிகாரிகளால் ஏற்படுத் தப்பட்ட பிரத்தியேக மான இரண்டு புகை வண்டித் தொடர்கள், சுமார் நாலு ஆயி ரம் அடியார்கள், சௌகரிய மாகச் சென்னையிலிருந்து திருத் தணி சென்று, மறு நாள் காலை திரும்ப பேருதவியாயிருந்தன. இத்தொண்டில் இரயில் உத்தியோ கஸ்தர்களும் பங்கெடுத்துக் கொள்ள முன்வந்து ஒத்துழைத்து உதவி செய்தது போற்றத்தக்கதே.

பேயனைடாத்து கோமாளி வாழ்க்கை
போமாறு பேர்த்து உன் அடிதாராய்

காலை 9—மணிக்கு திருத்தணி ரயில் நிலயத்திலிருந்து ஸ்ரீ திருப்புகழ் மணி அவர்கள் ஸ்ரீ முருகதாசர் அவர்களுடைய வாத்திய உதவியுடன் பஜனை செய்து கொண்டு 12—மணிக்கு மலை அடிவார சத்திரத்தைச் சேர்ந்தார்கள். எங்கும் முருக நாமமுழக்கத்துடன் மங்கள கரமாகத்தோன்றியது. எங்கு சென்றாலும் அன்புடன் அழைத்து அமுதளித்தார்கள்



பஜனையுடன் படி மீது செல்லும் காக்ஷி

மாலை 5—மணிக்குத் திருப்படி மீது திருப்புகழ்பாடிக் கொண்டு ஸ்ரீ திருப்புகழ் மணி அவர்கள் கோயிலைச் சேர்ந்து அங்கும் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

திருத்தணிகையைப் பற்றி சுமார்500—வருடங்களுக்கு முன் ஸ்ரீ அருணகிரி நாதர்

“ திருப்புகழோதுங் கருத்தினர் சேருந்
திருத்தணி மேவும் பெருமாளே

என்று பாடியுள்ளார்கள். திருப்புதழ் பாடும் அடியார்கள் பல ஊர்களிலிருந்தும் பஜனை கோஷ்டியாருடன் இந்த வைபவத்தில் கலந்து கொள்ளுகிறார்கள்.

“ பலகாலு முனைத் தொழு வோர்கள்
மறவாமல் திருப்புகழ் கூறி
படிமீது துதித்துடன் வாழ அருள்வேளே

என்று ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் பாடி வேண்டிக் கொண்டது மிகச் சிறப்புடன் கைகூடி வருவதும் தணிகேசனின் கருணையே.

அயில் கொண்டு திமூடன மெனதந்தையுடன் மருவி
அருமந்த பொருளை இனி அருள் வாயே

பொருளடக்கம்

359

			பக்கம்
1.	மணியும் ஒளியும்	(திருப்புகழ் மணி)	... 1
2.	அடியார் கூட்டத்தின் ஆவிர்ப்பாவம்	(என். எஸ். ஆர்)	... 4
3.	ஸ்ரீ அருணகிரியார்	(வே. து.)	... 8
4.	ஒருமைப்பாடு	(செ. பொ. புவனகிரி)	... 9
5.	ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்	(V. S. வெங்கடராமன்)	... 12
6.	கோயிலாண்டியில் குமார ஷஷ்டி விழா		... 17
7.	தன்வந்திரி பகவான்		... 19
8.	இருந்தவர்	(அ. சீனிவாசராகதன்)	... 22
9.	ஸ்ரீ குமர குருபரர்—கந்தர் கலிவெண்பா	(ரசபதி)	... 26
10.	திருத்தணி திருப்படி திருப்புகழ் திருக்கூட்ட திருவிழா		... 31

அமிர்தவசனி வருட சந்தா ரூ. 1—8—0 அனுப்பவும் (வி. பி. இல்லை)
ஆயுள் சந்தா ரூ 25—0—0 (இருபத்தைந்து)

நூதன வர்ணப் படங்கள்

சைவ சமயாசாரியர்
நால்வர் ரூ 1-0-0

குமர குருபரன்
(முருகன்) ரூ. 1-4



சிவதாண்டவம் 14×20 ரூ. 1—8—0 அருணகிரிநாதர் ரூ. 1—8—0
160 பாடலடங்கிய திருப்புகழ்மாலை புத்தகம் ரூ. 0—8—0
அமிர்தவசனி காரியாலயம், 54. பந்தர் தெரு., சென்னை

சிறந்த பாராயணப் புத்தகங்களுக்கு
பி. டி. பாணி அண்டு கம்பெனி
17, வெங்கடாசல செட்டி தெரு., திருவல்லிக்கேணி.

Reg. No. M. 5390

ஷண்முகம் பிராண்டு

ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்

நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக
உறுதியானதும் உத்திர
வாதமுமான சரக்குகள்.

சி. ஞானசுந்தர நாயகர்

341, எஸ்பிளனேட், சென்னை—1.

ஷோ ரூம்: 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற

நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.,

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூல வீதி, - மதுரை.

TEL:—"FAITH" ESTD:—1924. PHONE:—113

நீங்கள் விரும்பக்கூடிய உயர்ந்த
உண்மையான ரகங்கள், பல
வகை பட்டு, நூல் ஆடை
களுக்கு கியாதிபெற்ற
நம்பிக்கையான
இடம்

கருப்பண்ண முதலியார் ஸ்டோர்ஸ்

பட்டு அண்டு கைத்தறி ஜவுளி வியாபாரம்

53, கிடங்கு தெரு, மதராஸ்-1.

Printed by T. Iyaswamy, Manager Haddon & Co.,
49. Badrian St., Madras 1. Phone No. 55044.
Edited & Published by S. Muthuswamy, 54, Bunder St., Madras.